பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
13 07 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு நீடித்த நிலையான வளர்ச்சியை உறுதி செய்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. நாட்டின் எல்லைப் பகுதிகளில் எழுச்சிமிகு கிராமங்கள் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா இன்று புதுதில்லியில் உயர்மட்ட ஆலோசனை நடத்தினார்.
3. சட்டக்கல்வியை மாநில மொழிகளில் கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட் வலியுறுத்தியுள்ளார்.
4. தமிழகத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுவோருக்கு எதிராக கடுமையான தண்டனை விதிக்க வகை செய்யும் புதிய தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச் சட்டம் அமலுக்கு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
5. ஜிம்பாப்வே அணிக்கு எதிரான டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா பத்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

[]<<<>>>[]

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு நிலையான நீடித்த வளர்ச்சியை உறுதி செய்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் 29 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்தும் அடிக்கல் நாட்டியும் பிரதமர் உரையாற்றினார்.

தற்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ள திட்டங்கள் மகாராஷ்டிரா-வின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் பணியில் மகாராஷ்டிராவுக்கு முக்கிய பங்கு உள்ளதாகவும் அவர் கூறினார்.,

அம்மாநிலத்தில் வலுவான வேளாண்மை மற்றும் தொழில்துறை வளர்ச்சிப் பெற்றுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

நாட்டின் முக்கிய நிதி மையமாகவும் அம்மாநிலம் திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான கட்டமைப்பு மகாராஷ்டிராவில் உள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டின் எல்லைப் பகுதிகளில் எழுச்சிமிகு கிராமங்கள் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா இன்று புதுதில்லியில் உயர்மட்ட ஆலோசனை நடத்தினார்.

கூட்டத்தில் பேசிய திரு அமித்ஷா, பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு நாட்டின் எல்லைப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், எல்லை கிராமங்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து வசதி செய்து தரப்பட வேண்டுமென்று கூறினார்.

எல்லை பகுதிகளில் பணியில் உள்ள மத்திய ஆயுதப்படையினர் மற்றும் ராணுவத்தினர் உள்ளூர் விவசாயிகளின் வேளாண் உற்பத்தி பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்களை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

எழுச்சிமிகு கிராமங்கள் திட்டத்தின் கீழ் 136 எல்லைப்புற கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, வானிலை மாற்றங்களை தாங்கவல்ல 113 சாலை திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்த உள்ளதாகவும், இதற்காக இரண்டாயிரத்து 420 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

எல்லை கிராம மக்களின் வசதிக்காக அஞ்சலக பண பரிவர்த்தனை வங்கிகளை தொடங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் திரு அமித்ஷா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அவரது உடல்நலன் குன்றியதை அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

**[]<<<>>>[]**

மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், மீன்வளம் சார்ந்த தொழில்களை ஊக்கப்படுத்தவும் மத்திய அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன் சிங் தெரிவித்துள்ளார்.

இன்று தமிழகத்தின் ராமேஸ்வரத்தில் அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவிலில் சுவாமி தரிசனம் செய்த பின், மீனவர்கள் சங்க பிரதிநிதிகள் அளித்த கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இலங்கை வசம் உள்ள மீன்பிடி படகுகளை மீட்கவும், தற்போது சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஷெடியூல்டு வகுப்பு மக்களுக்கு எதிரான வன்கொடுமையை தடுக்க தமிழகத்தில் ஆளும் திமுக அரசு தவறிவிட்டதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கள்ளக்குறிச்சியில் ஏற்பட்ட கள்ளச்சாராய மரணத்தில் உயிரிழந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் ஷெடியூல்டு வகுப்பை சேர்ந்தவர்கள் என்று கூறியுள்ளார்.

இந்த சம்பவம் தேசிய அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ள நிலையில், பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை தமிழத்தில் சட்டம் ஒழுங்கு முழுவதும் சீர்கெட்டுள்ளதை வெளிப்படுத்தி உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழகத்தில் ஷெடியூல்டு வகுப்பினருக்கான அங்கீகாரமும் உரிமைகளும் தொடர்ந்து மறுக்கப்படுவதாக கூறி, சில சம்பவங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் ஊடகங்களில் வந்த செய்திகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் மற்றும் விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வகை செய்யும் புதிய தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச் சட்டம் அமலுக்கு வருவதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சட்டவிரோதமாக கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் மற்றும் விற்பனை செய்வோருக்கான தண்டனைகள் இரண்டு ஆண்டுகள் முதல் பத்து ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையாக விதிக்க புதிய சட்டம் வகை செய்கிறது.

இக்குற்றங்களில் ஈடுபடுவோரின் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கும் புதிய சட்டம் வகை செய்கிறது.

கள்ளச்சாராயம் தொடர்பான குற்றங்களில் கைது செய்யப்படுவோர் எளிதில் பிணையில் வெளி வர முடியாதவாறு சட்டப்பிரிவு கடுமையாக்கப்பட்டுள்ளது.,

[]<<<>>>[]

சட்டக்கல்வியை மாநில மொழிகளில் கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட் வலியுறுத்தியுள்ளார்.

லக்னோவில் உள்ள டாக்டர் ராம் மனோகர் லோகியா தேசிய சட்ட பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி அவர் பேசினார்.

சட்டத்தின் சாராம்சங்களை மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் கற்பிக்க வேண்டுமென்று அவர் கூறினார்.

மக்கள் நாட்டின் சட்டங்களைப் பற்றி தெரிந்து கொள்ளாமல் இருப்பதை சட்டக் கல்வியில் உள்ள குறைபாடாகவே தாம் கருதுவதாக அவர் தெரிவித்தார்.

உச்சநீதிமன்றத்தில் ஆங்கிலத்தில் வெளியாகும் தீர்ப்புகளை மக்கள் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக, மாநில மொழிகளில் மொழி பெயர்த்து தருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதையும் திரு சந்திரசூட் சுட்டிக்காட்டினார்.

பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட உத்திரபிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், சிறந்த நிர்வாகம் இருந்தால்தான் சிறந்த ஆட்சி அமையும் என்று கூறினார்.

நாட்டில் தற்போது சட்டத்தின் ஆட்சி நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

நாடு முழுவதும் ஏழு மாநிலங்களில் உள்ள 13 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்றது.

இதுவரை முடிவுகள் வெளியான 12 சட்டப்பேரவைத் தொகுதிகளில் காங்கிரஸ் நான்கு இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

திரிணமூல் காங்கிரஸ் மூன்று இடங்களில் வெற்றிபெற்று ஒரு இடத்தில் முன்னிலை வகிக்கிறது.

பஞ்சாபில் ஆம் ஆத்மி கட்சி ஜலந்தர் தொகுதியில் வெற்றிபெற்றுள்ளது.

இமாச்சல பிரதேசத்தில் காங்கிரஸ் இரண்டு இடங்களிலும், பிஜேபி ஒரு இடத்திலும் வெற்றிபெற்றுள்ளது.

பீகார் மாநிலத்தில் ரூபாலி சட்டப்பேரவைத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளர் வெற்றிபெற்றுள்ளார்.

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் திரு அன்னியூர் சிவா வெற்றிபெற்றுள்ளார்.

அவர் தமக்கு அடுத்தபடியாக வந்த பாமக வேட்பாளர் திரு சி அன்புமணியை விட 67 ஆயிரத்து 169 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றிபெற்றார்.

திமுக வேட்பாளர் திரு அன்னியூர் சிவா பெற்ற வாக்குகள் ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 195.

பாமக வேட்பாளர் திரு சி அன்புமணி பெற்ற வாக்குகள் 56 ஆயிரத்து 26

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் டாக்டர் அபிநயா பத்தாயிரத்து 130 வாக்குகள் பெற்றுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் உள்ள மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

*( சவுண்ட்பைட் - செ க ) -50---- செகண்ட்*

**[]<<<>>>[]**

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா பத்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஹராரேயில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதையடுத்து முதலில் களமிறங்கிய ஜிம்பாப்வே நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஏழு விக்கெட் இழப்புக்கு 152 ரன் எடுத்துள்ளது.

153 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா 15 புள்ளி இரண்டு ஓவரில் விக்கெட் இழப்பின்றி 156 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**[]<<<>>>[]**

உலக **Legends** கிரிக்கெட் சாம்பியன் போட்டியில் இன்று நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்தில் இந்தியா – பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

பெர்மிங்ஹாமில் இப்போட்டி இரவு மணி 9-30-க்கு தொடங்குகிறது.

-----------

**Brawo** ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – **Ecuador**–ன் **Gonzalo Escobar** இணை, நெதர்லாந்தின் சான்டர் **Arends** - **Robin Haase** இணையிடம் தோல்வியடைந்தது.

***End of News***